20th April 1959]

Sri A. VEDARATHNAM : மெடிகல் க்ரௌண்டில் மதுபானம் வழங்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஒரு சர்ஜன் ஜெனரல் கூறியிருக்கிறார், ஆல்ககால் வியாதிகளை குணப்படுத்துவது கிடையாது. அது, மருந்துகளை ப்ரசர்வ் செய்ய மட்டுமே உபயோகப்படும் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, மெடிகல் க்ரௌண்டில் மதுபானம் கொடுக்க வேண்டிய அவசியமிருக்கிறதா? அப்படி கொடுப்பதினால் மெடிகல் ப்ராக்டீஷனர்ஸ் அதைத் துஷ்பிரயோகம் செய்து, பெர்மிட்டிக்கு சர்டிபிகேட் கொடுப்பதினால் அவர்கள் நிறைய பணம் சம்பாதிக்கிறார்கள். ஆகவே, இந்த பர்மிட் கொடுக்கும் வழக்கத்தைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்க முன்வருமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ஏதோ ஒரு சர்ஜன் ஜெனரல் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார் என்பதினால் அதன் மேல் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள முடியாது. ஒரு டாக்டர் ஒருவருக்கு இன்ன வியாதி இருக்கிறது, அதற்கு மது அவசியம் என்று சர்டிபிகேட் கொடுக்கும்போது, பெர்மிட் கொடுக்கப்படுகிறது. இதைத் தவிர்ப்பதற்கில்லை, இப்பொழுதுள்ள சட்டப்படி.

Srimathi KAMALAMBUJA AMMAL : பதனீர் திட்டம் எந்தெந்த இடங்களில் வெற்றிகரமாக நடைபெற்றுவருகிறது. எந்தெந்த இடங்களில் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது? எங்கெங்கு சீராக நடைபெறுகிறது, என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : சிற்சிலயிடங்களில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுவருகிறது என்பது உண்மையே. இருந்தாலும் எங்கெங்கு சீராக நடைபெறுகிறது என்ற விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை. ரெப்ரிஜியேட்டரில் இதை வைத்தால் அது குளிர்ச்சியாக இருப்பதோடுகூட அது கெட்டுப் போவதில்லை. அந்த வகையில் இதை விஸ்தரிப்பதுதான் அரசாங்கத்தின் யோசனை.

Sri B. DORAISAMI REDDIAR : கலயத்தில் சுண்ணாம்பு தடவி எடுக்கும்போது, அது பதனீராகிறது.

Mr. SPEAKER : கேள்விதான் கேட்கவேண்டும்.

Sri B. DORAISAMI REDDIAR : சுண்ணாம்பு தடவாமல் எடுத்தால் அது மாமூல் நீராகி விடுகிறது. அப்படியும் செய்கிறார்கள், எங்கள் பகுதியில். ஆகவே, பதனீர் இறக்குவதற்கு லைசென்ஸ் கொடுக்காமல் இருந்தால் நன்றாகயிருக்கும் என்பதை நான் சபா நாயகர் அவர்களிடமும், அமைச்சர் அவர்களிடமும் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் என்ன விவரம் தெரிந்து கொள்ள விரும்புகிறார் என்பது எனக்கு புரியவில்லை.

Mr. SPEAKER : பதனீர் இரக்க லைசென்ஸ் கொடுக்க வேண்டாம் என்று சொல்லுகிறார்.

Teachers' Training College, Orathanad

*16 *Q.*—**Sri A. VEDARATHNAM :** கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) ஒரத்தநாடு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் எத்தனை உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள்?

[20th April 1959

(ஆ) அவர்களில் ஒவ்வொருவரின் தகுதியும் மாதச் சம்பளமும் எவ்வளவு ?

THE HON SRI C. SUBRAMANIAM : (a) & (b) A statement [a] is placed on the table of the House.

SRI A. VEDARATHNAM : பல்கலைக்கழகத் துணை வேந்தர் அவர்கள் குறிப்பிட்ட குறைகள் நீங்கிவிட்டதா ? அப்படியானால் அந்த யுனிவர்சிட்டி அபிலியேஷன் இந்த காலேஜிற்கு கிடைத்து விட்டதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அபிலியேஷன் கிடைப்பதில் தகராறு இருப்பதாக தெரியவில்லை. ஏனெனில் இதற்கு முன்னாலேயே அபிலியேஷன் இருந்தது. ஆனால் அதில் ஒரு குறை இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள் ; அதுவும் இப்பொழுது நீக்கப்பட்டிருக்கிறது.

Government Hospitals.

*17 *Q.*—SRI N. R. THIAGARAJAN :—கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பரா—

(அ) சென்னை ராஜ்யத்தில் தாலுகாவாரியாக உள்ள சர்க்கார் ஆஸ்பத்திரிகள் எத்தனை ?

(ஆ) தாலுகாவாரியாக சர்க்கார் சர்வீஸில் உள்ள டாக்டர்கள் எத்தனை பேர் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) & (b) A statement [b] is placed on the table of the House.

SRI N. R. THIAGARAJAN : ஜனத்தொகை குறைவாக இருக்கக் கூடிய தாலுகாவையும், ஜனத்தொகை அதிகமாக இருக்கக்கூடிய தாலுகாவையும் ஒன்றாகக் கருதாமல் ஜனத்தொகை அடிப்படையில் ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்தி டாக்டர்களை நியமிக்க சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது ஏற்கனவே இருக்கிற நிலைமையைக் குறிக்கிறது. இப்போது 65,000, 70,000 ஜனங்களுக்கு ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் என்ற முறையில் ஆங்காங்கு ஹெல்த் சென்டர்ஸ் ஏற்படுத்தப்படுகிறது. அந்த முறையிலே எல்லா ஜனங்களுக்கும் வைத்திய வசதி செய்து கொடுக்கப்படும்.

SRI M. K. SOMASUNDARAM : மேஜையின்மேல் வைக்கப்பட்டிருக்கும் குறிப்புப்படி ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் உள்ள டாக்டர்கள் சர்க்காரால் நியமிக்கப்படுகிறார்கள். இவர்களைத் தவிர ஆஸ்பத்திரிகளிலுள்ள ஹானரரி டாக்டர்கள் சரியாக தங்கள் வேலையை கவனிப்பதில்லை என்று ரிபோர்ட்டு வந்திருக்கிறது. ஆகையால் அவர்களை நீக்கிவிட்டு, எல்லா டாக்டர்களையும் அரசாங்கமே நியமிப்பதற்கு முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எதோ, எங்கேயோ ஒரு தவறுதல் இருந்தால் அதற்காக பொதுவாக எல்லா ஹானரரி டாக்டர்களும் சரியாக வேலை செய்வதில்லை என்று சொல்வதற்கு இல்லை. ஹானரரி டாக்டர்கள் நல்ல முறையில் வேலை செய்கிறார்கள் என்ற தகவலும் கிடைத்திருக்கிறது. சில இடங்களில் டாக்டர்கள் சரியாக

---

[a] Printed as Appendix V on page 48 infra.

[b] Printed as Appendix VI on pages 48—50 infra.